# SWOAD

## SOCIAL WELFARE ORGANIZATION AMPARA DISTRICT
## அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு.

# ஆண்டறிக்கை - 2017





## 01.அறிமுகம்.

1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட யுத்தத்தினாலும், வன்செயல் களினாலும், அரசின் இனஒதுக் கலினாலும் பௌதீக ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் பாதிக்கப்பட்ட, பின்தங்கியிருந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு புத்தொளியூட்டப்பட வேண்டுமென்ற நோக்கில் **"எல்லோருக்கும் நல்வாழ்வு"** என்னும் தொனிப்பொருளை அடிநாதமாகக் கொண்டு இவ்வமைப்பு உதயமானது.

இவ்வமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலுள்ள 58 கிராமக் கிளைகளில் மூவின மக்களினையும் உள்ளிணைத்து செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

செயற்பாட்டு வழிமூலங்களாக 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 6 பிரதேச காரியாலயங்களையும், 51 கிராமக் கிளை அலுவலகங்களையும், அக்கரைப்பற்றில் தலைமைக் காரியாலயத்தினையும் கொண்டு, 4679 அங்கத்தவர்களையும், 81 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் கண்காணித்து வழிப்படுத்தப்பட்டுக் கொண்டு வருகிறது.

### 02. தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

### 03. பணிநோக்கு / Mission

விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும், ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுள்ள பணியாளரையும் கொண்ட அமைப்பு.

### 04. நோக்கம் :

1. நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், வறுமையை தணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
3. ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும், அதனை மேம்படுத்தலும்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
5. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு வழிகாட்டல்.
6. வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குதல்.
7. சமூக நல்லுறவு மற்றும் இனங்களிடையிலான சமாதான நல்லுறவை ஏற்படுத்தல்.

**05.இலக்குக் குழுக்கள் :**

1. பெண்கள்.
2. சிறுவர்கள்.
3. முதியோர்கள்.
4. இளைஞர்கள்.
5. பெண் தலைமைதாங்கும் குடும்பங்கள்.
6. வறிய மாணவர்கள்.
7. மிகவும் வறிய குடும்பங்கள்.
8. பாதிக்கப்பட்ட மக்கள்.
9. வெளிநாடு சென்ற குடும்பங்கள்.

**06. பணியாற்றும் பிரதேசங்களும், கிராமங்களும்.**

| பிரதேசம் | கிராமங்களின் எ-கை |
|---|---|
| *பொத்துவில்* | *09* |
| *திருக்கோவில்* | *14* |
| *காரைதீவு* | *05* |
| *கல்முனை* | *08* |
| *சம்மாந்துறை* | *09* |
| *நாவிதன்வெளி* | *06* |
| **மொத்தம்** | **51** |

**07. பணியாளர்கள் விபரம்.**

| | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| *மாவட்ட மட்டம்* | *14* | *21* | *35* |
| *பிரதேச மட்டம்* | *06* | *05* | *11* |
| *கிராம மட்டம்* | *0* | *14* | *14* |
| *பாலர் பாடசாலை ஆசிரியர்கள்* | *0* | *21* | *21* |
| **மொத்தம்** | **20** | **61** | **81** |

**08. அங்கத்தவர்கள் விபரம்.**

| பிரதேசம் | கிராமங்களின் எ-கை | மொத்த அங் எ-கை. |
|---|---|---|
| *பொத்துவில்* | *09* | *570* |
| *திருக்கோவில்* | *14* | *1606* |
| *காரைதீவு* | *05* | *503* |
| *கல்முனை* | *08* | *738* |
| *சம்மாந்துறை* | *09* | *579* |
| *நாவிதன்வெளி* | *06* | *683* |
| **மொத்தம்** | **51** | **4679** |

## நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள்.

### 01. வாழ்வாதார திட்டம்.

- நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் முகமாக சுவாட் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, திருக்கோவில், பொத்துவில் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 3398 பயனாளிகளிக்கு 137,056,715.00 ரூபாய் நிதியானது சேமிப்புக் கடன் திட்டத்தின் கீழ் வாழ்வாதார தொழில்களை மேற்கொள்வதற்கு கடனாக வழங்கப்பட்டுள்ளன.

- SDDP (Support for District Development Plan Project) திட்டத்தின் ஊடாக இத்திட்ட செயற்பாட்டு பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி, ஆலையடிவேம்பு, இறக்காமம் ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும் தேவை மதிப்பீட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட இலகுவில் பாதிப்படையக்கூடிய தொழிலில் ஈடுபடுகின்ற 480 குடும்பங்களில் கடந்த வருடம் 314 குடும்பங்களுக்கும் இவ்வருடம் 166 குடும்பங்களுக்கும் தங்களின் தொழிலை மேலும் விஸ்தரித்து மேலதிக வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு ஒருவருக்கு 20,000.00 ரூபாய் வீதம் வீதம் சுமார் 9,600,000 நிதி ஒதுக்கீட்டில் தொழிலுக்கான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.





- SDDP (Support for District Development Plan Project) திட்டத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட 236 கைவினை உற்பத்தியாளர்களுக்கான தும்பு, பனையோலை, சிரட்டை அலங்காரம், சட்டிபானை உற்பத்தி, திரை அலங்காரம், மற்றும் துணி அலங்காரப்பொருட்களை உற்பத்தி செய்வது தொடர்பான மேலதிக தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் தொழிலில் ஈடுபடுகின்ற 175 பயனாளிகளுக்கு சுமார் 1,750,000.00 நிதி ஒதுக்கீட்டில் உற்பத்திக்கான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.





- இத்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 175 உள்ளூர் உணவு உற்பத்தியாளர்களுக்கு தொழில்வான்மை தொடர்பான தொழில்நுட்ப பயிற்சிகள் வழங்கப்பட்டு (Industrial Technology Institute (ITI) அவர்களில் தொழிலில் இடுபடுகின்ற 150 பயனாளிகளுக்கு தொழிலுக்குத் தேவையான 20,000.00 ரூபாய் பெருமதியான உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.






- தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டவர்களின் உள்ளூர் உற்பத்திப்பொருட்களை ஊக்குவித்து சந்தை வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்குடன் இவ் உற்பத்திப் பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்வதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வழங்கும் முகமாக SDDP திட்டத்தினூடாக பிரதேச மட்ட வர்த்தக கண்காட்சி ஒன்று அம்பாறை குணசேன விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் 6 பிரதேசங்களில் இருந்தும் 67 இற்கு மேற்பட்ட உற்பத்தியாளர்கள் கலந்து கொண்டு தங்களது உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்துகொண்டதுடன், சந்தை வாய்ப்பிற்கான தொடர்புகளையும் பெற்றுக்கொண்டுள்ளனர்.






- SDDP திட்டத்தினூடாக சங்கங்களை வழிநடாத்துதல் தொடர்பான 2 நாட்கள் கொண்ட பயிற்சியானது திருக்கோவில், ஆலையடிவேம்பு, இறக்காமம், நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களின் சுவாட் அமைப்பின் ஸ்தாபகர் திரு.ச.செந்துராசா அவர்களினால் நடாத்தப்பட்டது. இதில் கலந்துகொண்ட 190 CBOs அங்கத்தவர்களும் தங்களது அமைப்புக்களை பேண்தகு நிலையை நோக்கி எவ்வாறு கொண்டு செல்லலாம் என்பது தொடர்பான அறிவு திறன்களை பெற்றுள்ளனர்.





- SDDP திட்டத்தினூடாக தெரிவு செய்யப்பட்ட CBOs களுக்கான கொள்தகுதிறன் பயிற்சியானது 5 தலைப்புகளில் (தலைமைத்துவம், திட்டமுன்மொழிவு, சட்ட அம்சங்கள் மற்றும் நிறுவன முகாமைத்துவம், கூட்டறிக்கை மற்றும் கடிதம் எழுதுதல் ஆவணப்படுத்தல், அடிப்படை கணக்கு வைப்பு முறை மற்றும் நுண்கடன் திட்டம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 120 CBOs க்களில் இருந்து 1025 அங்கத்தவர்கள் கலந்துகொண்டு பயிற்சி தொடர்பான அறிவினைப் பெற்றுள்ளனர்.





- SDDP திட்டத்தினூடாக திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பெண் தலைமைத்துவ குடும்ப பெண் உறுப்பினர்கள் மற்றும் குறைந்த வருவாய் ஈட்டும் பெண்களின் பொருளாதார அடைவு மட்டத்தினை உயர்த்தும் நோக்கில் முற்றிலும் பெண்களின் முயற்சியை கொண்டு தொழிற்பட்டுவரும் "SEWA" நிலையத்தின் ஊடாக திருக்கோவில் ஆதார வைத்தியாலை நோயாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு சகாய விலையில் ஆரோக்கியமான உணவுப்பொருட்களை வழங்கும் நோக்கில் கடந்த 28.08.2017 காலை வைத்தியசாலை கட்டிட தொகுதியில் சிற்றுண்டிசாலை திறந்து வைக்கப்பட்டது.






- சங்கங்களை வலுப்படுத்தும் நோக்குடன் யாழ் நகரில் திறமையாகச் செயற்படும் 3 சங்களை அடையாளங்கண்டு அங்கு சங்கங்களின் முக்கிய பிரதி நிதிகள் மற்றும் பொறுப்பு வாய்ந்த அரச உத்தியோகத்தர்களும் அழைத்துச்செல்லப்பட்டு அங்குள்ள புதிய முன்னேற்ற கரமான செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடியதன் மூலம் மேலதிக அறிவினைப்பெற்றுள்ளனர். இதில் 6 பிரதேசங்களில் இருந்தும் மொத்தமாக 57 பேர் கலந்து கொண்டனர்






## 02.இளையோர்களுக்கான தொழில் பயிற்சி வழங்கல்.

மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்டு வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டல் வழங்குவதை நோக்காக் கொண்டு WUSC நிறுவனத்தின் அனுசரணையுடன் Room Attendant Course, Guest Relation Agent course, Aluminum Fabricator Course ஆகிய தொழில் பயிற்சிகள் அமைப்பினால் நடாத்தப்பட்டன. இத்தொழில் பயிற்சியின் மூலம் 75 இளையோர்கள் பயன் பெறுள்ளனர்.






- இப்பயிற்சி மாணவர்களின் மொழியறிவினை விருத்தி செய்யும் நோக்கில் ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கான வகுப்புக்களும் நடாத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் வழிகாட்டல், மேலதிக பாதுகாப்பு, தலைமைத்துவம், பால்நிலை சமத்துவம், தொடர்பாடல், உரிமைகள், பொறுப்புக்கள், முதலுதவி, வாழ்க்கைத்திறன் தொடர்பான பயிற்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

- பயிற்சிநெறி மாணவர்களின் பெற்றோர்களுக்கான கூட்டமானது திட்ட உத்தியோகத்தர் மற்றும் நிர்வாக முகாமையாளர் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டதோடு இப்பயிற்சியில் பெற்றோரின் பங்களிப்பு மற்றும் பிள்ளைகளில் தொழில் திறன், நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், மற்றும் மாணவர்களின் வருகை, பாதுகாப்பு போன்ற விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.





- இளைஞர் யுவதிகள் மத்தியில் தனியார்துறை தொழில்வாய்ப்புக்கள் பற்றி ஊக்குவிக்கும் முகமாக இருநாள் கொண்ட இளைஞர் முகாம் ஒன்று WUSC நிறுவனத்தின் நிதியுதவியுடன் 11 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 200 க்கும் மேற்பட்ட தொழிலை எதிர்பார்த்திருக்கின்ற இளைஞர் யுவதிகள் பங்குபற்றுதலுடன் சுவாட் அமைப்பினால் 2017.02.18-19 ம் திகதி வரை தம்பட்டை சுவாட் பயிற்சிகூடத்தில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். நசீர் அவர்களும் WUSC அமைப்பின் பிராந்திய குழுக்களுக்கான தலைவர் எம். யோகேஸ்வரன் அவர்கள் மற்றும் அதிதிகள் கலந்து கொண்டு பயிற்சியில் பங்குபற்றிய இளைஞர் யுவதிகளுக்கான சான்றிதழ்களையும் திறமையை வெளிப்படுத்தியவர்களுக்கான பரிசுப்பொருட்களையும் வழங்கிவைத்தனர்.






## 03.இளைஞர்களைக்கொண்டு சமூக அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்கொள்ளல்.

கிராம மட்டங்களில் அபிவிருத்திச் செயற்பாட்டை இளைஞர்களுக்கூடாக கட்டியெழுப்பும் நோக்கில் பொத்துவில் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 30 இளைஞர், யுவதிகளுக்குக்கான வலுவூட்டல் பயிற்சியானது சுவாட் அமைப்பின் ஸ்தாபகர் திரு.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் சுவாட் பொத்துவில் பிரதேச அலுவலகத்தில் 02.05.2017ம் திகதி நடாத்தப்பட்டதுடன், கிராம, பிரதேச ரீதியாக அடையாளம் காணப்பட்ட தேவை, பிரச்சினைகளை அக்கிராமங்களிலுள்ள இளையோர்களைக்கொண்டு சமூகப்பங்களிப்புடன் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளும் சுவாட் அமைப்பின் 6 செயற்பாட்டு பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.









- இளைஞர்களின் ஆளுமையினை விருத்தி செய்யும் வகையில் SDDP திட்டத்தின் ஊடாக 102 இளைஞர் யுவதிகளுக்கான 4 மாதகால பயற்சி நெறியானது (YLD Program) South Eastern University யின் விரிவுரையாளர்களைக் கொண்டு நடாத்தப்பட்டு பயிற்சி முடிவில் 90 பேருக்கான சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது.





- தென்கிழக்கு பல்கலைக்கழகத்தினூடாக தலைமைத்துவம் மற்றும் ஆளுமை விருத்தி தொடர்பான 4மாத கால பயிற்சியினை நிறைவு செய்த இளைஞர்யுவதிகளையும் ஒன்றிணைத்து கிராமங்களில் அடையாளங் காணப்பட்ட பிரச்சனைகளுக்கு விழிப்பூட்டல் பயிற்சியினை மேற்கொள்வதற்கான Module தயாரிப்பதற்குரிய பயிற்சியானது பிரதித்திட்டமிடல் பணிப்பாளர் திரு.மோகனகுமார் அவர்களைக்கொண்டு நடாத்தப்பட்டது





- Module Preparation தொடர்பான பயிற்சியினை நிறைவு செய்த YLD மாணவர்களால் கிராமங்களில் அடையாளங்காணப்பட்ட பிரச்சனைகளுக்கான Module தயாரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரதேசங்களுக்கு 5 விழிப்புணர்வு பயிற்சிகள் வீதம் 30 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது. இதில் 1364 கிராம மக்கள் கலந்து கொண்டு வழங்கப்பட்ட பயிற்சிகள் தொடர்பான அறிவினைப்பெற்றுள்ளனர்.





## 04. சிறுவர் அபிவிருத்தித் திட்டம்.

**பாலர் பாடசாலை நடாத்தல்.**

சிறுவர் அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கீழ் அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் 15 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலைகளில் 29 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 464 சிறார்கள் கல்விகற்றும் வருகின்றனர்.

**பாலர் பாடசாலை பற்றிய விபரம்.**

| இல | பிரதேசம் | பாடசாலைகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | திருக்கோவில் | 7 | 239 | 17 |
| 2 | சம்மாந்துறை | 1 | 27 | 2 |
| 3 | நாவிதன்வெளி | 7 | 198 | 10 |
| | **மொத்தம்** | **15** | **464** | **29** |

**மாணவர்களுக்கான விடுகை விழா மற்றும் கலை நிகழ்வுகள், விளையாட்டுப்போட்டிகளை நடாத்தல்.**

கல்வி கற்றுவரும் சிறார்களின் திறன், ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் நோக்கில் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான விடுகைவிழா மற்றும் கலை நிகழ்வுகளும், விளையாட்டுப்போட்டிகளும் பிரதேச மட்டத்தில் நடாத்தப்பட்டு பரிசீல்களும் வழங்கப்பட்டுள்ளன.







**முன்பள்ளி மாணவர்களுக்கான விற்பனைச் சந்தை நடாத்தல்.**

**சுவாட் முன்பாடசாலை மாணவர்களின் விற்பனைச் சந்தையானது 2017.07.16 ஞாயிற்றுக் கிழமையன்று திருக்கோவில் பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச்சங்க வளாகத்தில் திருக்கோவில் பிரதேச நிருவாக உத்தியோகத்தர் திருமதி. நிஷாந்தி ஜீவகுமார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் திருக்கோவில் கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு.S.தர்மபாலன், கிழக்குமாகாண முன்பள்ளி பணியக வெளிக்கள உத்தியோகத்தர் திரு.மோகனதாஸ் அவர்களும் அதிதிகளாக கலந்து கொண்டனர்.**





**பெற்றோர் நிர்வாகத்திற்கான மாதாந்த ஒன்றுகூடல் நடாத்தல்:-**

மாணவர்களின் கல்வி முன்னேற்றங்கள், குறைபாடுகள் குறித்தும், கல்வி மேம்பாட்டில் பெற்றோரின் பங்களிப்பு தொடர்பாகவும் மாதாந்தம் பெற்றார் நிர்வாக்கூட்டம் அமைப்பினால் நடாத்தப்பட்டு கல்வி மேம்பாடு குறித்து பல தீர்மானங்களை மேற்கொண்டு அவற்றினை அமுல்ப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான மாதாந்த கலந்துரையாடல் நடாத்தல்.**

ஆசிரியர்களின் கற்பித்தல் முறைமையினை மேம்படுத்தும் நோக்கில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு வருகின்றன. இக்கலந்துரையாடலின்போது ஆசிரியர்களினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகள் குறித்தும், தேவைகள் குறித்தும் ஆராயப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும் வழங்கப்பட்டுவருவதுடன், திறன் மேம்பாடு குறித்த பயிற்சிகளும் நடாத்தப்பட்டுள்ளன.

## 05.சமூக அபிவிருத்தி தொடர்பான செயற்பாடுகள்.

**குழுக்கூட்டம் நடாத்தல்.:-** சமூக அபிவிருத்தி செயற்பாட்டின் கீழ் 6 பிரதேசத்திலும் 10 – 15 பேர் கொண்ட 281 சுயசார்புக் குழக்கள் அமைக்கப்பட்டு மாதாந்தம் குழக்கூட்டங்கள் நடைபெற்று வருவதுடன், குழு அங்கத்தவர்களுக்கிடையிலான தேவை, பிரச்சினைகளும் ஆராயப்பட்டு அவற்றுக்கு தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**கிளை நிர்வாக ,பிரதேச நிர்வாக்ககூட்டம் நடாத்தல். :-** ஒவ்வொரு பிரதேச மட்டத்திலும் மாதாந்தம் கிளைக்கூட்டம், பிரதேச நிர்வாகக்கூட்டம் நடாத்தப்பட்டு கிளை, பிரதேச ரீதியான செயல் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வும், செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேவைகள் குறித்து கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான தீர்வுகளும், நடவடிக்கைகளும் உரிய காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இக்கலந்துரையாடலில் துறைசார் நிபுணத்துவர்களைக் கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**குழுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.**

ஒருவருக்கொருவர் உதவி செய்யும் ஒற்றுமை மனப்பான்மையை உருவாக்கி தங்களது குடும்ப முன்னேற்றத்திற்கும், கிராம ,சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குமாக தன்னார்வத்துடன் சுயமாக செயற்படும் நோக்கில் இக் குழுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குழுச் செயற்பாடுகளாக பாடசாலை, ஆலயங்களில் சிரமதான நடவடிக்கைகளும், பயிர் விதைகள், பழமரக் கன்றுகளை வழங்குதல், வருமானம் தரும் உள்ளூர் உற்பத்திகளை குழுவாக இணைந்து மேற்கொள்ளல், வறிய மாணவர்களுக்கு உதவுதல், இயலாமைக்குட்பட்டவர்களுக்கு உதவுதல், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர்.







## 06. பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டம்.

சுவாட் நிறுவனத்தின் நிதி வழங்கும் நிறுவனங்களில் ஒன்றாக சுவிஸ் முகவர் அமைப்பின் (Swiss Development Cooperation -SDC) நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகின்ற தொழிலாளர்கள் பாதுகாப்பாக புலம் பெயர்வதற்கான வழிகாட்டல் (Safe labor migration) திட்டமானது அம்பாறை மாவட்டத்தில் உள்ள பொத்துவில், ஆலையடிவேம்பு, அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, நிந்தவூர், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, இறக்காமம், உகணை ஆகிய 10 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள மற்றும் மீண்டும் நாடு திரும்பிய 11835 குடும்பங்களுடன் இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. இத்திட்டத்தின் ஊடாக கீழ் குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் இவ்வருடம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 01.பாதுகாப்பான புலம்பெயர்தல் குறித்து தகவல்களை வழங்கல். (Access to Information)

- சுமார் 43,000 புலம்பெயர் தொழிலாளர் மற்றும் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.





- கிராம மட்டத்தில் பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் நோக்கில் 248 தொண்டர்கள் பயிற்றுவிக்கப்பட்டு இவர்கள் ஊடாக கிராம மட்டங்களில் தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.






- பொது மக்களுக்கு பாதுகாப்பான முறையில் வெளிநாடு செல்வது தொடர்பான தகவல்களை வழங்கும் நோக்குடன் மக்களுடன் நேரடியாக இணைந்து பணியாற்றுகின்ற 884 அரச அதிகாரிகள் பயிற்றுவிக்கப்பட்டு அவர்களூடாகவும் தகவல்கள் மக்களை வழங்கப்படுகின்றன.






- 14 பிரதேச செயலாளர் பிரிவுகளில் தகவல் நிலையங்கள் உருவாக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்ட DO-FE ஊடாக மக்களுக்கு பாதுகாப்பாக புலம்பெயர் தொடர்பான தகவல்கள் மற்றும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான வழிகாட்டல்கள், தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் இவ்வருடம் 64 பேர் FBR report பெற்று பாதுகாப்பான முறையில் வெளிநாடு சென்றுள்ளதுடன், 456 பேருக்கு அலோசனை வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





- 832 இலகுவில் பாதிப்படையக்கூடிய குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு பாதுகாப்பான புலம்பெயர்வு தொடர்பாக முன் தயார்படுத்தல் குறித்த தகவல்கள் வழங்கப்பட்டுள்ளன.





- புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களை உள்ளிணைந்த 127 சிறு குழக்கள் அமைக்கப்பட்டு அவர்களுக்கூடாகவும் தகவல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.




- SDC திட்ட செயற்பாட்டு பிரதேசங்களிலுள்ள பிரதேச பெண்கள் சம்மேளனத்தின் செயற்பாடுகளை வினைத்திறனான கொண்டு செல்லும் நோக்கில் சுமார் 30.000 பெறுமதியான தளபாடங்கள் மற்றும் காகிதாதிகளும் வழங்கப்பட்டுள்ளன.




- சுவாட் அமைப்பினால் SDC அமைப்பின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் பாதுகாப்பான புலம்பெயர் தொழிலாளர் நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட மாவட்ட திட்ட ஆலோசணைக்குழுவின் நான்காவது கூட்டத்தொடர் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் திரு. துசித. பி. வனிகசிங்க அவர்களின் தலைமையில் 02.03.2017 ம் திகதி அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. இக்கூட்டத்தில் திட்டத்தின் முன்னேற்றங்கள் சவால்கள், அமைப்பின் செயற்பாடுகள தொடர்பாகவும் சுவாட் அமைப்பின் தலைவர் திரு.Vபரமசிங்கம் மற்றும் திட்ட முகாமையாளர் திரு.K. பிறேமலதன் ஆகியோரினால் விரிவான விளக்கம் அளிக்கப்பட்டது. இக்கலந்துரையாடலில் மேலதிக

மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள், மாவட்ட இணைப்பாளர்கள் , திட்டத்துடன் தொடர்புடைய ஏனைய திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்டு தங்களது பெறுமதியான ஆலோசணைகளை வழங்கினர்.





- சர்வதேச புலம்பெயர் தொழிலாளர் தினத்தில் புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களை கௌரவிக்கும் நிகழ்வு சுவாட் அமைப்பினால் பிரதேச செயலகத்துடன் இணைந்து. ஒழுங்கு செய்யப்பட்டு இத்திட்டச் செயற்பாட்டு பிரதேசங்களான 10 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் DS,ADP,AO-GN,GS,DDO,CA,DOs,Mediation member, Paralegals, POIC, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.





**2.புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான சட்ட உதவி வழங்கல்.**
**(Access to Legal Support)**

- பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் சட்ட ரீதியான பிரச்சினைகளுக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்கும் முகமாக SDC திட்டச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற 12 பிரதேச செயலாளர் பிரிவுகளில் இருந்தும்

புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கிய 87 முறைப்பாடுகள் இவ்வருடம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அவற்றில் 80 வீதமான முறைப்பாடுகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் இவ்வருடம் 9 பேருக்கு 2,821,060.56 ரூபாய் நஸ்டஈட்டுத்தொகையாக பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளது.





- கிராம, பிரதேச மட்டங்களில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், சவால்களுக்கான ஆலோசனை, வழிகாட்டல்களை மேற்கொண்டு தீர்வுகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இவ்வருடம் 111 பேர் (Government officers, mediation board members, volunteers and Staff ) சட்ட உதவியாளர்களாக பயிற்றுவிக்கப்பட்டு கிராமமட்டங்களில் செயற்பட்டு வருகின்றனர்.





- புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களில் காணப்படுகின்ற பிரச்சினைகள் குறித்து மத்தியஸ்தசபைக்கு கிடைக்கப்பெறுகின்ற பிணக்குகளை கையாள்வதற்கான இலகுபடுத்தல்களை மேற்கொண்டு வழங்கும்பொருட்டு புதிதாக தெரிவு செய்யப்பட்ட 7 பிரதேச செயலாளர் பிரிவுகளிலுமுள்ள மத்தியஸ்தசபைக்கு சுமார் 50.000.00 ரூபாய் பெறுமதியான தளபாட உபகரணங்கள் 350,000.00ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் வழங்கப்பட்டுள்ளதுடன், மத்தியஸ்தசபை ஊடாக புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் தொடர்பாக 255 பிணக்குகள் கிடைக்கபபெற்று அவற்றில் 152 முறைப்பாடுகளுக்கு தீர்வுகாணப்பட்டுள்ளது.




- பாதிக்கப்பட்ட புலம்பெயர் தொழிலாளர்களுக்கு சட்ட நிவாரணத்தினைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கில் சுவாட் நிறுவனம் ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துடன் இணைந்து சட்ட நடமாடும் சேவை நடாத்தப்பட்டது. இதில் சுமார் 100 இற்க்கு மேற்பட்ட புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் கலந்து கொண்டு தங்களின் முறைப்பாடுகளை பதிவு செய்து கொண்டனர். இந்நிகழ்வின்போது இலங்கை வெளிநாட்டு அலுவலகள் பிரதி அமைச்சர் அவர்களும் எமது அலுவலகத்திற்கு வருகைதந்திருந்தார்.




### 3.புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கான சமூக உளவள உதவி வழங்கல். (Access to Psychosocial Support)

- 57 அரச அதிகாரிகளுக்கும், 11 பணியாளர்களுக்கும் சமூக உளவள ஆற்றுப்படுத்தல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டு அவர்களுக்கூடாக கிராமமட்டத்தில் புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்கள் எதிர்நோக்கிய 474 உளவளப் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டதுடன் அவற்றில் 459 முறைப்பாடுகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

- பிரதேச செயலகத்தில் பிரதேசரீதியான சமூக உளவள மீளுட்டல் கலந்துரையாடல் நடைபெற்று வருவதுடன், மாவட்ட ரீதியான உளவள கலந்துரையாடலானது அக்கரைப்பற்று சுவாட் தலைமை அலுவலகத்தில் நடாத்தப்படுகின்றது. இவ் மீளுட்டலில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளுக்கு மேற்கொள்ளப்படும் உளசமூக செயற்பாடுகள்'' தொடர்பாக கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான நடவடிக்கைகள் மெற்கொள்ளப்படுகின்றன.




- 209 புலம்பெயர் தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களிலிலுள்ள பிள்ளைகளுக்கு சிகிச்சைக்கான போக்குவரத்து செலவுகள் மற்றும், பாடசாலை உபகரண வசதிகள் மேற்கொண்டு வழங்கப்பட்டுள்ளன.





- தொழில் நிமிர்த்தம் வெளிநாடு சென்றுள்ள குடும்பங்களிலுள்ள முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் பல்வேறு உளநலப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். இந்நிலையிலிருந்து இவர்களை பாதுகாத்து குடும்பத்திலும், சமூகத்திலும் நற்புறவான சூழலை ஏற்படுத்தி இவர்களின் சமூக உளவளப் பிரச்சினைகளை குறைக்கும் முகமாகவும், அவர்களுக்கான ஆதரவைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும் முதியோர், சிறுவர்களுக்காக பணியாற்றுகின்ற அரச உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு, முதியோர், சிறுவர் சங்கங்களை புனரமைப்புச் செய்து அவர்களுக்கான கலந்துரையாடல்களும், சிறுவர்தின, முதியோர்தின நிகழ்வுகளும், உளவள மேம்பாட்டு நடவடிக்கைக்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், முதியோர் நலன்நோம்பு திட்டங்களும் பெற்றுக்கொடுக்கப்பட்டு வருகின்றன.







**4.மீள நாடு திரும்புதவும், மீள் இணைதலும்.**
**(Return and Reintegration)**

- சுமார் 5680 புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன. இப்பயிற்சியின் ஊடாக வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படுகின்ற நிதியில் 753 புலம் பெயரதொழிலாளர் குடும்பங்கள் வருமானம் தரும் புதிய தொழில்களை மேற்கொண்டு வருவதுடன், வெளிநாட்டிலிருந்து அனுப்பப்படுகின்ற பணம் உரிய நோக்கத்தை அடைவதற்கு பயன்படுத்தும் வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.





- புலம் பெயர் தொழிலாளர்கள் மத்தியில் சேமிப்பு பழக்கம் அதிகரிக்கப்பட்டுள்ளது.
- வெளிநாட்டிலிருந்து மீள நாடு திரும்பிய 122 குடும்பங்களுக்கு தேவையான ஆலோசனை வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





- 132 குடும்பங்களுக்கு தொழிலுக்கான நிதி உதவிகள் வழங்கப்பட்டு சுயதொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.





- தொழில் நிமிர்த்தம் புலம்பெயர்கின்ற தொழிலாளர்களுக்கு தொழில்சார் அறிவினை வழங்கி தொழில் திறனுள்ளவர்களாக வெளிநாடு செல்வதற்கும், அதிக சம்பத்தை பெற்றுக்கொள்வதற்கும், தமது திறனை மேலும் விருத்திசெய்து கொள்ளும்நோக்கிலும் திறன் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுடன் இணைந்து இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் பயிற்சிகளும் இத்திட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளன.





## அமைப்பின் உள்ளக ரீதியான செயற்பாடுகள்.

- செயற்பாட்டு முன்னேற்றம் குறித்தும், செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினைகள், திட்டத்தின் பின்னடைவுகள் குறித்து ஆராய்ந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கும் நோக்கில் அமைப்பினால் மாதாந்த மீளாய்வுக் கலந்துரையாடல்கள் தலைவர் திரு.வ.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டு வருகின்றது.


- ஒவ்வொரு திணைக்கள ரீதியாகவும் காணப்படும் பிரச்சினைகள் குறித்து உடனுக்குடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் நோக்கில் வாரத்தில் 3 நாட்கள் முகாமைத்துவசபை ஒன்றுகூடி பிரச்சினைகளை ஆராய்ந்து அவற்றுக்கான தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது.






- சுவாட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூக அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் குழு, கிளை, பிரதேச மட்டத்தில் காணப்படும் குறைபாடுகள், பிரச்சினைகள் குறித்தும், அவற்றை மேம்படுத்திக்கொள்வது தொடர்பிலான உபாயத்திட்டங்கள் குறித்தும் மீளாய்வுக் கலந்துரையாடலானது 15.09.2017ம் திகதி சுவாட் தலைமைக்காரியாலய பயிற்சி மண்டபத்தில் ஸ்தாபகர் திருவாளர்.ச.செந்துராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் தலைவர் திரு.வ.பரமசிங்கம் மற்றும் முகாமைத்துவசபை உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.





- சுவாட் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சமூக அபிவிருத்தி மற்றும் சேமிப்புக் கடன் திட்டச் செயற்பாடுகளில் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர்களின் வகிபாகம், பங்களிப்புக்கள் குறித்தும், அவர்களின் கீழ் பணியாற்றுகின்ற பணியாளர்களின் செயற்பாடுகளை எவ்வாறு கண்காணித்து உறுதிப்படுத்தல், அவர்களை வழிப்படுத்தல் தொடர்பில் சுவாட் அமைப்பின் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர்கள் மற்றும் பிராந்திய இணைப்பாளர்களுடனான கலந்துரையாடலானது 07.09.2017ம் திகதி சுவாட் தலைமையலுவலகத்தில் நிர்வாக முகாமையாளர் திருமதி.கஜேந்தினி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.




- சுவாட் அமைப்பின் எதிர்கால செயற்பாடுகள், புதிய கட்டமைப்புக்கள் குறித்த திட்டமிடல் கலந்துரையாடலானது 26.08.2017ம் திகதி அமைப்பின் ஸ்தாபகர் திருவாளர் ச.செந்துராசா அவர்களின் தலைமையில் சுவாட் தலைமைக்காரியாலய பயிற்சி மண்டபத்தில் நடைபெற்றது. இக் கலந்துரையாடலில் தலைவர் திருவாளர் வ.பரமசிங்கம் மற்றும் முகாமைத்துவசபை உறுப்பினர்கள், கிராம, பிரதேச, தலைமையலுவலக பணியாளர்கள் அனைவரும் கலந்துகொண்டு செயற்பாடுகளை வினைத்திறனாக கொண்டுசெல்லும் வகையில் அவர்களது கருத்துக்களையும்,அலோசனைகளையும் உபாயத் திட்டங்களையும் வழங்கினர்.




- பணியாளர்களுக்கான வலுவூட்டல் கலந்துரையாடல், மற்றும் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் நிகழ்வு இணைப்பாளர் திரு S.செந்தூராஜா சேர் அவர்களின் தலைமையில் 2017.08.01ம் திகதி சுவாட் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.





- சீரற்ற காலநிலையான வெள்ளம், மண்சரிவினால் காரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப் பொருட்களை சுவாட் அமைப்பின் திருக்கோவில் பிரதேச உத்தியோகத்தர்கள் மற்றும் இப் பிரதேச அமைப்பு அங்கத்தவர்களும் இணைந்து சேகரித்து 02.06.2017 திகதி வெள்ளிக்கிழமை சுவாட் அமைப்பின் தலைவர் திரு. பரமசிங்கம் அவர்களின் தலைமையில் திருக்கோவில் பிரதேச செயலக நிவாரண பிரிவிடம் பொருட்களை வழங்கி வைத்தனர்.





- பணியாளர்களுக்கான வலுவூட்டல் கலந்துரையாடல் அமைப்பின் இணைப்பாளர் திரு S.செந்தூராஜா சேர் அவர்களின் தலைமையில் 2017.05.11 ம் திகதி சுவாட் தலைமைக் காரியாலயத்தில் இடம்பெற்றது.




- சுவாட் அமைப்பினால் உலக கனேடிய பல்கலைக்கழக சேவை - WUSC நிறுவணத்துடன் இணைந்து முன்னெடுக்கப்பட்ட Guest Relation Agent பாடநெறியை பூர்த்தி செய்த மாணவர்களுடைய பிரியாவிடை நிகழ்வு 2017.02.15 ம் திகதி சுவாட் அமைப்பின் தலைமைக்காரியாலயத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் WUSC அமைப்பின் அம்பாரை மாவட்ட சிரேஷ்ட நிகழ்ச்சித்திட்ட உத்தியோகத்தர் திரு.எஸ். ஜேசு சகாயம் அவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன் சுவாட் அமைப்பின் சார்பில் தலைவர் திரு. V. பரமசிங்கம் அவர்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்ட முகாமையாளர் திரு. K. பிறேமலதன் அவர்கள், திட்ட உத்தியோகத்தர்கள், நிருவாக உத்தியோகத்தர், போதனாசிரியர்கள் மற்றும் அமைப்பின் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துக்களை தெவித்தனர் . இந்நிகழ்வில் மாணவர்களினால் போதனாசிரியர்கள் மற்றும் சுவாட், WUSC அமைப்புக்களுக்கு நினைவுச்சின்னங்களும் வழங்கிவைக்கப்பட்டன.